ஸ்ரீ தந்வந்தரயெ நம:

# வைத்ய சந்திரிகை.

தமிழ்நாடு ஆயுர்வேத மஹா மண்டலத்தின் மாதப் பத்திரிகை.

Vol. 14. | MAY 1952. | No. 5




श्रीसुधादिसोदरौषधीशसंभवोज्वला
धीविलासहेतुगोप्रसारशोधितान्तरा॥
कामदा कलावती कवीन्द्रवर्णिता परं
पत्रिकेश्वराश्रया विभातु वैद्यचंद्रिका॥

ஆசிரியர்: பண்டிட் S. நாராயணய்யங்கார், மதுரை.
உதவி ஆசிரியர்: பண்டிட் P. S. ராமசர்மா, கரூர்.

வருஷ சந்தா 5—0—0

கோட்டக்கல்

## ஆர்ய வைத்தியசாலையின்

**மருந்துகள் எல்லா வித வியாதிகளையும் பூர்ண குணப்படுத்துவதுடன், வைத்தியர்களின் கீர்த்தியையும் பாதுகாக்கிறது.**

எல்லா வித நோய்களுக்கும் பூர்ண பரிஹாரம் தேடுகிறவர்கள்
எங்கள் தலைமை வைத்யர்

**P. M. வாரியரை**

நேராகவோ, தபால் மூலமாகவோ

**யோஜனை கேட்டு பலன் அடையலாம்**

**நரஸிம்ம ரஸாயனம், க்ஷீரபலா**

முதலிய மருந்துகளின் சிறப்பு நிகரற்றது.

எங்கள்

## "பாடாதி சூரணம்"

பல்லின் ஈறில் சீ வருவது, ரக்தம் வருவது, அரிப்பு, பல் ஆட்டம், பல் தேய்ந்து போவது, முதலிய பல் ஈறு சம்பந்தமான நோய்களை முற்றிலும் தீர்த்து, பல்லிற்கும், ஈறுக்கும் வலுவூட்டக் கூடியது. ஆகாரத்திற்கு முன் இச்சூர்ணத்தை தேனில் கட்டியாகக் குழைத்து ஈறிலும், பல்லிலும் தடவி அழுத்தி தேய்த்து சிறிது நேரம் கழித்து வென்னீரினால் கொப்பளிக்கவும்.

கள்ளிக்கோட்டை, பாலக்காடு, திரூர், ஈரோடு பிராஞ்சுகளில் நல்ல பயிற்சியும், திறமையும் வாய்ந்த எங்கள் உதவி வைத்யர்கள் எப்பொழுதும் இருப்பார்கள்.

*Manager,*

Arya Vaidyasala, Kottakal P. O.,
**S. MALABAR.**

உ

# பொருளடக்கம்.


| | | பக்கம் |
|---|---|---|
| 1. | நமது நன்றி | 1 |
| 2. | கப காலத்தில் ஔஷதங்கள் (ராதாகிருஷ்ண சாஸ்திரீ, திருச்சி) | 3 |
| 3. | நேத்ர ரோக சிகித்ஸை (ஸ்ரீனிவாஸ அய்யங்கார், தஞ்சாவூர்) | 7 |
| 4 | மஹாமண்டலச் செய்திகள் | 8 |
| 5. | வைத்ய சந்திரிகை | 11 |
| 6 | தமிழ்நாடு ஆயுர்வேத நிர்வாஹ ஸமிதிக் கூட்டம் | 14 |
| 7. | ஸ்தாபக தின உரை | 16 |
| 8. | சசாங்க கிரணம் (பால் கோவா) | 19 |
| 9. | திரட்டு வாகடம் ௫௦ | 1-4 |


உ

# நமது நன்றி.

மனித வர்க்கத்தின் முக்கிய தர்மம் நன்றியறிதலே. தேசீய வைத்யத்திற்காக பெரிய த்யாகம் செய்த உத்தமர்களுக்கு நமது தேசம் என்றும் கடமைப்பட்டிருக்கிறது. சகல தர்மங்களுக்கும் சாதனமான உடலைக் காப்பாற்றும் வைத்யத்திற்காகச் செய்யப்படும் தர்மம்தான் எல்லாவற்றிலும் சிறந்தது அதிலும் உடல் வலிமையால் சிறிதும் அதர்மத்திற்கு வழிகாட்டாத பரம தர்ம சாதனமான ஆயுர்வேதத்திற்குச் செய்யும் த்யாகம் நிகரில்லாத சர்வோத்தம தர்மம் என்பதும் காரிய காரணங்களைச் சிந்திக்கும் விவேகிகளுக்கு நன்கு விளங்கும். நமது தென்னாட்டில் தற்பொழுது ஆயுர்வேதத்திற்காகச் சேவை செய்யும் ஸ்தாபனங்கள் மிகக் குறைவே. கோட்டக்கல் ஆர்ய வைத்ய பாடசாலை ஷோரனூர் கேரளீய ஆயுர்வேத சமாஜம் பஜலாடா நாரிராமா சாஸ்திரிகள் பாடசாலை. சென்னை வெங்கட்ரமண ஆயுர்வேத கலாசாலை இந்நான்கு தர்ம ஸ்தாபனங்கள்தான் தற்பொழுது சுத்தமான மஹர்ஷிகளின் உபதேசங்களையே முக்கியமாகக் கொண்டு ஆயுர்வேதத்திற்கு உயிர்கொடுத்து வருகிறது என்றால் மிகையாகாது. இவைகளில் மிகப் புராதனமானது, சென்னை வெங்கட்ரமண கலாசாலை. இக்கலாசாலையின் ஸ்தாபகர் ஸ்ரீமான் V. கிருஷ்ணசாமி அய்யர். இவர் செய்திருக்கும் த்யாகம் நம் நாட்டில் ஸம்ஸ்கிருதத்திற்கும் ஆயுர்வேதத்திற்கும் மிகவும் பெருமையை உண்டுபண்ணியிருக்கிறது. 20—4—52-ல் சென்னையில் அன்னாரின் ஞாபகார்த்த தினம் மிகவும் விமர்சையாகக்

கொண்டாடப்பட்டது தற்பொழுது அவரால் ஸ்தாபிக்கப்பட்ட கலாசாலையும், வைத்யசாலையும் மிகவும் நல்ல நிலையில் நடந்து வருகிறது. பொதுஜனங்கள் அறிந்த விஷயமே அவர் தவப்புதல்வர் ஸ்ரீ K. பாலசுப்ரமணியய்யர் இந்த ஸ்தாபனத்திற்காக பெரும் பாடுபட்டு வருகிறார். ஆனால் இந்த ஸ்தாபனம் ஏற்பட்டு வெகுகாலம் ஆயிருந்தும் அதிகம் விஸ்தரிக்கப்படவில்லை என்பது வருந்தத் தகுந்தது. பிராசீன அஷ்டாங்க வைத்யங்களுக்கு புத்துயிர் கொடுப்பது இந்த ஸ்தாபனம் போன்ற பெரிய ஸ்தாபனங்களால்தான் முடியும். நவீனக் கருவிகளை எவ்விதம் உபயோகப்படுத்தி பிராசீன ஆயுர்வேதத்தை அபிவிருத்திசெய்வது என்பதும் இப்பொழுது மிக அவசரமான விஷயம். தவிரவும் A. B என்ற பேதத்தை நீக்காவிடில் இம்மாதிரி ஸ்தாபனங்களில் படிக்கும் வித்யார்த்திகளுக்கு அதிக ஊக்கம் இருக்கமுடியாது. ஆகையால் கூடிய சீக்கிரம் தகுந்த வசதிகள் செய்து கொடுத்து சர்க்காரின் முதல்தரப்பட்டத்திற்கு தகுதியாக்க வேண்டும். ஸ்தாபகர் தினக்கொண்டாட்டத்தை ஒரு அழியாப் புகழுடன் செய்ய ப்ரதி வருஷமும் ஒரு பண்டித மஷத் ஏற்பாடு செய்து ஏதாவது ஒரு விஷயத்தை சாஸ்திர ஆராய்ச்சி மூலம் சித்தாந்தம் செய்து பதிவுசெய்து கொள்ளவேண்டும் - இம்மாதிரி மஹா புண்ய கைங்கரியத்தில் ஈடுபட்ட ஸ்ரீ V. கிருஷ்ணசுவாமி அய்யர் அவர்களுக்கும் அவர் வார்சுகளுக்கும் நமது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறோம்


# திருச்சி

## ஆயுர்வேதிக் யூனியன் லிமிடெட்.

17 சின்னக்கடைத் தெருவு,

தெப்பக்குளம் P. O. திருச்சிராப்பள்ளி.

### வைத்தியர்களுக்கு

எல்லா சாஸ்திரீய மருந்துகளும் மிகக் குறைந்த விலைக்கு சப்ளை செய்யப்படும்.

விவரங்களுக்கு எழுதித் தெரிந்துகொள்ளவும்.

உ

# கப காஸத்தில் ஔஷதங்கள்.

(வைத்ய விசாரதா S. V. ராதாகிருஷ்ண சாஸ்திரீ, திருச்சி)

காஸ ரோகத்தில் கப காஸத்தால் ஏற்படும் பற்பல குறிகளில் கபத்தின் தன் நிலை மாறுதலைச் சீர்செய்யவும், கெட்ட கப மலத்தை வெளிப்படுத்தவும், சுத்த கபத்தை உண்டாக்கவும் சக்தி உள்ள பல ஔஷதங்கள் கூறப்பட்டுள்ளன. போதகம், தர்பகம், ச்லேஷகம், அவலம்பகம், க்லேதகம் என ஐந்து வகையாக கபம் காணப்பட்டாலும், ஒவ்வொரு வியாதியிலும் இவ்வைந்து வகை கபமும் கெடுதி அடைகின்றது. இவ்வைந்தில் கெடுதியின் அளவில் ஒருக்கால் சற்று த்தாரதம்யம் இருக்கலாம். ஆகையால் சிகித்ஸை விஷயத்தில் தனித்து போதகத்திற்கெனவோ, தர்பகத்திற்கெனவோ சிகித்ஸை கூறப்படுவதில்லை ஆனால் காஸத்தில் கெடுதி அடையும் கபம் பல நிலைமைகளில் காணப்படுகின்றது. அதற்கேற்ற சிகித்ஸை முறையும் மாறுபடலாம்:

வியாதிகளில் கெடுதி அடையும் ஒவ்வொரு தோஷத்திற்கும் ஆமம், பச்யமானம், பக்வம் என, பக்வமடையும் முன் நிலைமையும் பக்வமடைந்து கொண்டிருக்கும் நிலைமையும், பக்வ நிலைமையும், என மூன்று வித நிலைமைகள் உண்டு. கபத்தில் அந்நிலைமைகளை நன்கு உணரமுடியும் இம் மூன்று நிலைமைகளிலும் கபம் பலவாறாகக் காணப்படுகின்றது கபத்தின் ஆமநிலைமையில் காஸத்தில் கப ஸ்தானமான சுவாஸாசயங்களில் கபம் கெட்டியாகச்சேர்ந்து தான் பாகத்தை அடைவதற்காக தனது ஸ்தானத்தில் வீக்கத்தையும், தாபத்தையும் உண்டாக்குகின்றது. சயப்பிரகோப நிலைகளிலிருப்பதால் பக்கத்திலுள்ள ரக்தவஹ சிரைகளிலும் ரக்தம் பூர்ணமாகி கனத்துப்போகின்றது. அதனால் தலையிலுள்ள கபவஹ சிரைகளும் கனத்து ப்ரதிச்யாயம் (மண்டைச்சளி) போன்ற கெடுதிகள் விளைகின்றன.

சில சமயம் இக் கபம் வாதத்தின் சேர்க்கையால் உலர்ந்து கெட்டியாக வெளிப்படுத்த முடியாமல் வரண்ட இருமலுடன் மிகவும் சிரமப்பட்டு சிறிது சிறிதாக வெளிப்படுகின்றது. இந்நிலையில் ரக்தமும் சிறிது கலந்து வெளிவரும்.

சில சமயம் இக் கபம் பித்தத்தால் விதாகமடைந்து இளகி சிரமமில்லாமல் எப்பொழுதும் இருமல் மூலம் வெளிவந்து

கொண்டிருக்கும். அதிகமாக கபம் வெளிவருவதால் ஏற்படும் பலக்குறைவும், அடிக்கடி இருமலால் ஏற்பட்ட சிரமமும் இதன் உபத்திரவங்கள்.

சில சமயம் கபத்தை வெளிப்படுத்த இயற்கையாக சரீரத்தில் ஏற்படும் இருமல் ஏற்படாமல் சுவாஸாசயத்தில் கபம் வியாபி வெளிப்படாமல் இருக்கும் அல்லது கபம் கெட்டியாக இருப்பதால் வெளிப்படுத்துவது மிகவும் சிரமமளிப்பதாக இருக்கலாம். அந்நிலையில் கபத்தை திரவப்படுத்துவது அவசியமாகின்றது. சில சமயம் திரவமான கபம் அதிகமாக இருப்பதால் ஏற்படும் சிரமத்தைக் குறைக்கக் கபத்தை உலரவைத்துக் கெட்டிப்படுத்த வேண்டியதாகின்றது.

ஆக கபத்தின் நிலைமை பல வகையாக இருப்பதால் அவைகளின் சிகித்ஸை முறையும் பலவிதமாகின்றது. அவ்வித சிகித்ஸை முறைகளைப்பற்றிச் சிறிது ஆராய்வோம்.

முதலாவது:— சுவாஸாசயத்திலுள்ள நாடிகளிலுள்ள கலா என்ற மெல்லிய விரிப்பினுள் (Membrane) உதகாம்சம் எனும் கபதாது அதிகப்படியாகச் சேர்ந்து அங்கு வீக்கத்தையும், சுவாஸத்தில் சிரமத்தையும் உண்டாக்கி அக் கபச்சேர்க்கையை குறைத்து வெளிக்கொணர இருமல் உண்டாகின்றது. இந்நிலையில் கபவாத தோஷங்களின் குறிகள் அதிகம் காணப்படுகின்றன. மார்பில் கபம் அதிகம் சேர்வதால் விம்மியும், கனத்தும் காணும். இதில் வசம்பு, ஆடாதொடை, வெட்பாலை, இபிகாக்வான்ஹா வேர், இவைகள் சேர்ந்த யோகங்கள் வாந்தியை உண்டாக்கி சயம் (அதிக சேமிப்பு) அடைந்த கபத்தை வெளிக்கொண்டு வருகின்றன. இதனாலும் கபம் குறைகின்றது கபம் வெளிவந்தும் அங்குள்ள சிரைகளின் முகம் நன்கு விரிந்து ரக்த ஓட்டம் அதிகமாகி மிகுதியான கெடுதியான கபமும் வெளிவருவது எளிதாகின்றது ஆடாதொடையும் ஊமத்தை விதையும் சுவாஸ நாடிகளின் வீக்கத்தைக் குறைப்பதுடன் அங்கு பித்தத்தால் ஏற்படும் எரிச்சலையும் குறைக்கின்றன. வத்ஸநாபியும் சுவாஸ நாடிகளின் வீக்கத்தைக் குறைப்பதிலும் கபத்தை வெளிக்கொணர்வதிலும் சிறந்தது மலங்காரைக்காய் சேர்ந்த வமன யோகங்களும், அல்லது மலங்காரைக்காய், வேம்பின் பஞ்சாங்கம், வேப்பெண்ணெய், நியக்ரோதாதிகணம், ஸாரிவாதிகணம் (அ. ஹ்ரு ஸூ 15 அ) இவைகளின் திரவ்யங்கள், குல்பனப்ஷா, அதிமதுரம், ஆடாதொடை, ஏலரிசி, தசமூலம், தேவதாரு, வம்சலோசனம், மூங்கிலுப்பு அக்ககாரம், தேன் இவைகளும் வாந்தியைக் கிளப்பி கபத்தை வெளிக்கொணருபவையே சற்று விசேஷமாக மனோசிலை, அப்பிரக பஸ்மம், தாம்ர பஸ்மம், துத்த

பஸ்மம், சிருங்கபஸ்மம், இவைகள் உபயோகப்படக்கூடியவை. ஸித்த ஔஷதங்களில், வாஸாவலேஹம், வாஸாபானகம், வாஸாரிஷ்டம் தசமூலாரிஷ்டம், தாடிமாஷ்டக சூர்ணம், கனகஸுந்திர ரஸம், சந்திராமிருத ரசம், வ்யோஷாதிவடீ முதலியவை சிறந்த குணமளிக்கின்றன.

இரண்டாவது :— கபம் சுவாஸாசயத்தில் அதிகமாகச் சேர்ந்தும் இருமல் தானே ஏற்படாவிடில் கபம் இயற்கையாக வெளி வருவதில்லை. அதனால் சுவாஸாசயத்தைத் தூண்டி கபத்தை வெளிவருவதற்கு இருமலை உண்டாக்க வேண்டியிருக்கிறது. இந்நிலையில் மார்பகத்தில் சேர்ந்துள்ள கபம் உலர்ந்து அதிகமாகக் காணப்படும். இவ்வித சிகிச்சை முடிவில் சுவாஸாசயத்தை மாத்திரம் தூண்டியோ அல்லது சரீரத்திலுள்ள ரக்த ஸஞ்சாரத்தையே அதிகப்படுத்த அதன் மூலமாக சுவாஸாசயத்தைத் தூண்டியோ ஔஷதங்கள் வேலை செய்கின்றன.

சூடம், அபின், கஞ்சா, யவக்ஷாரம், நவச்சாரம், பொட்டாஷியம் அயோடைட், உப்புகள், வம்சலோசனம், முதலிய மருந்து சரக்குகள் சேர்ந்த மருந்துகளோ, தனித்து அம்மருந்து சரக்குகளோ சுவாஸாசயத்தைத் தூண்டி இருமலை உண்டாக்கிக் கபத்தை வெளிக்கொணருகின்றன. கப உத்க்லேசனங்கள் என இவைகளுக்குப் பெயர்.

ஏலரிசி, லவங்கப்பட்டை, லவங்கப்பத்திரி ஓமம், ஸர்ஜரஸம் (மருத்துவெள்ளை) எட்டிக்கொட்டை, கரியபோளம், குக்குலு, பெருங்காயம், கல்யாண முருங்கைப்பட்டை, தாரஞ்சபீன், ரூமி மஸ்தகி, குந்துருக்கம், வேப்பெண்ணெய், கந்தகம் இவை சரீரம் முழுவதும் ரக்த ஓட்டத்தை அதிகப்படுத்தி சுவாஸ நாடிகளில் கபத்தை அதிகமாக வெளிப்படுத்தி அதன்மூலம் காஸத்தை உண்டாக்கி கபத்தை வெளிப்படுத்துகின்றன ஏலரிசி, ஸர்ஜரஸம், குக்குலு பெருங்காயம், போன்றவைகளிலுள்ள எண்ணெய் ஸத்து சுவாஸாசயம் வழியாகவே, ரக்தமார்க்கத்திலிருந்து வெளிப்படுவதால் கபம் திரவமாகியும் அதிலுள்ள பூய Pus) த்தன்மை விலகியும் வெளிக்கொணரப்படுகின்றது, இவ்வகைப்பட்ட ஸித்த ஔஷதங்கள், மரிசாதி சூர்ணம், வாஸாவலேஹம், காஸ ஸம்ஹார பைரவ ரஸம், மரிசாதிவடீ, காஸாந்தக ரஸம், காஸ குடார ரஸம், சிருங்கராப்பிரம் சுவாஸ குடார ரஸம், கர்பூராஸவம், அஹிபேருஸவம், போலபத்தரஸம், ஜாதீபலாதிவடீ (சிரஹணீ கபாடம்) முதலிய யோகங்கள் சிறந்தவை. இந்த யோகங்கள் பைஷஜ்ய ரத்னாவளியிலும் ரஸேந்திர ஸாரஸங்கிரஹத்திலும் காணப்படுகின்றன. சியவனப்பிராசம், கஸ்தூரி பைரவ ரஸம், ஸ்வயமக்னி ரஸம், சந்திரப்பிரபா குக்குலு, ஸிதோ

பலாதி சூர்ணம், முக்தாதி சூர்ணம் (ச. சி. 17 சு) ஜீவந்தியாதி சூர்ணம், (ச. சி. 17 சு) இந்த யோகங்கள் ரக்த ஓட்டத்தை அதிகப்படுத்தி கபத்தை வெளிக்கொணருபவை. கடுகுப் பத்தும், ஊமத்தை இலை, நொச்சியிலை இவைகளை வாட்டி மார்பில் வைத்து கட்டுவதும் சிறந்தவையே

மூன்றாவது :— கபத்தை வெளிக்கொணர இயற்கையின் வேலையான இருமல் அதிகமாகி இருமி இருமி சரீரம் ஓய்ந்து போவதும், ஒவ்வொரு தடவையும் இருமலின் கடைசியில் கபத்தை வாந்தி செய்வதும், அதனால் முகம் உலர்ந்து அசதி ஏற்படுகின்றது இந்நிலையில சிகித்ஸை இரண்டாவது முறைக்கு முற்றிலும் விபரீதமானது அதாவது சரீரம் முழுவதும் உள்ள ரத்த ஓட்டத்தைக் குறைப்பதும் இருமலின் வேகத்தைத் தடைபடுத்துவதுமே வத்ஸநாபி, மனோசிலை, அன்னபேதி, மாக்ஷிகம் தாளகம் போன்ற தாதுப் பொருள்கள் சேர்ந்த மருந்தும், கோஷ்டம், ஜடாமாபஸீ, அபின், கஞ்சா, ஆடாதோடை, தாமரை இதழ், விதை, இலை தான்றிக்காய், கடுக்காய், கடுக்காய்ப்பூ இவை சேர்ந்த மருந்துகள் மிகக் குணமளிப்பவை.

இந்நிலை சில வியாதிகளில் முக்கியமாக ஆமாசயம், குடல், ஹிருதயம், கல்லீரல், மண்ணீரல், இவைகளில் ஏற்படும் வியாதிகளில் உபத்ரவமாக ஏற்படலாம். பாண்டுவில் ரக்தக்குறைவு அதிகமாகி சரீரத்திலுள்ள ஜலாம்சம் முழுவதும் துஷ்ட கபமாக மாறி சுவாஸாசயம் வழியாக வெளிப்படும்பொழுது ஓயாமல் இருமலும் வாந்தியும் ஏற்படுவதும் உண்டு. இந்நிலைகளில் முக்கிய வியாதிக்குள்ள மருந்துகளாலே, இந்நிலை மாறுவதும் உண்டு அதாவது கல்லீரல், மண்ணீரல் வீக்கங்களைக் குறைக்கும் பிப்பலீ வர்தமானம், தாம்ர பஸ்மம் போன்ற யோகங்களும் டிஜிடாலிஸ் இலைத்தூள், காட்டு வெங்காயத்தூள், ஆரோக்கியவர்தன ரஸம் போன்றவைகளால் பிரதான வியாதி குறைந்தவுடன் உபத்ரவமான கபகாஸமும் குறைவது உண்டு அம்மாதிரியே பாண்டுவில் ரக்தத்தை அதிகப்படுத்தும் நவாயஸம் ஏலா கஷாயம், கரும் பிரும்பாதி கஷாயம் Liver Extract இஞ்செக்ஷன்கள் முதலியவைகளால் பாண்டு குணமாகி வரும்பொழுதே கிரமமாக இக் கபகாஸமும் குறைவது கண்கூடு. ஆகையால் இவைகளில் காஸ வேகத்தைத் தடைப்படுத்த முயலுவதைவிட பிரதான வியாதி சிகித்ஸை செய்வதே சரியான வழியாகும்.

நான்காம் நிலை:— வெகுநேரம் மிகவும் சிரமத்துடன் இருமிய பிறகு சிறிதளவில் கபம் வருவதும் அதனால் ஏற்படும் மார்பில் வலியும், எரிச்சலும் இந்நிலை கப சயத்தால் அல்லது கபம் உலர்ந்துபோவதால் ஏற்படும் இதைக் கப காஸம் எனக் கூறத்

தகாதெனினும் கபத்திற்குள்ள விருத்தி சிகித்ஸையாலேயே இந்நிலை மாறுகிறபடியால் இதையும் இங்கே கூறியுள்ளோம். வாதாம்பருப்பு அரைத்துவிட்டபால், ரோஜா குல்கந்து, அதிமதுரப்பால் நெல்லிமுறப்பா, கரும்புச்சார், சியவனப்பிராசம், திராக்ஷை, சீமை இலந்தை, கண்டங்கத்திரி, பேரீச்சங்காய், ஸ்கூல்விதை, கல்கண்டு சேர்த்து பானங்கள், போன்றவை இந்நிலையில் மிகவும் உதவுகின்றன.

ஐந்தாம் நிலை;— கபம் திரவமாகி சிரமமில்லாமல் இருமலுடன் அடிக்கடி வெளிப்படுத்துவதும் சுவாஸாசயத்தில் கபதாரண சக்தி குறைவதும் இந்நிலையில், ஸர்ஜரஸம், மஞ்சள், ஜாதிக்காய், ஜாதிபத்திரி, சஞ்சாவிதை, ஸமுத்திராபச்சைவிதை, சிற்றாமுட்டிவிதை, அப்பிரகபஸ்மம், கடுக்காய் பூ, கர்பூரம், அவுரிவேர், ஊமத்தை புளிப்பு ருசியுள்ள மருந்துகள் முதலிய கபத்தினுள்ள திரவாம்சத்தைக் குறைத்து கபத்தை சரீரதாரணத்திற்கேற்ற பொருளாக மாற்றும் தன்மையுடைய மருந்துகள் குணம் தருகின்றன.

ஆறும் நிலை:— காஸம் அதிகமாக சுவாஸாசயத்தில் ஏற்படும் வேகத்தின் எதிரொலி சரீரம் முழுவதும் பரவி சுவாஸாசயத்தில் கபச்சேர்க்கையால் வாதத்தின் கதி பிரதிலோமமாகி சரீரம் முழுவதும் ஆக்ஷேபத்தை (உதரலை) உண்டாக்குகின்றது. இது குழந்தைகளுக்கு அதிகமாக ஏற்படுகின்றது மாந்தம் என இதைக் கூறுவர். இந்நிலையிலும் முதல் நிலையில் கூறிய வமனம் செய்யும் ஔஷதங்களும் வேப்பெண்ணெய், வெடியுப்பு, நவச்சாரம், அபின் முதலிய கபத்தைத் திரவமாக்கும் ஔஷதங்களும் வாதத்தை அனுலோமமாக்கச் சிறந்து விளங்குகின்றது. க்ஷாரம் உப்பு ருசியுள்ள மருந்துகள் கபத்தைத் திரவமாக்குவதிலும், புளிப்பு ருசியுள்ள மருந்துகள் கபத்தைக் கெட்டியாக்குவதிலும் சிறந்தவை என்பது ஞாபகத்திலிருக்கவேண்டும்.

உ

## "நேத்ர ரோக சிகித்ஸை."

(ஸ்ரீனிவாஸ அய்யங்கார், தஞ்சாவூர்.)

நேத்ர ரோக சிகித்ஸையைப்பற்றி அநேக அபூர்வ யோகங்கள் தஞ்சாவூர் ஸரஸ்வதி மஹாலில் காணப்படுகின்றன. அவற்றில் சில முக்கியமான யோகங்களை எழுதுகிறேன்.

### 1. மஹா ரத்னாதி மாத்திரை.

மாணிக்கம், முத்து, பவழம், இந்திரநீலம், கோமேதகம், மரகதம், பதுமராகம், புருஷராகம், வைடூரியம், வஜ்ரம் ஸ்படிகம்,

யானைக்கொம்பு, நாய்ப்பல், நரிப்பல், முதலைப்பல், குதிரைப்பல், கழுதைப்பல், ஒட்டகைப்பல், காயப்பால் எருமைப்பல், ஆட்டுப் பல் புலிப்பல் பசுப்பல், புலிநகம், கலைமான் கொம்பு, பன்றிக் கொம்பு, நீலாஞ்சனம், ஸ்ரோதாஞ்சனம், சவ்வீராஞ்சனம், புஷ்பாஞ்சனம் பொன்கிமிளை, வெள்ளிகிமிளை, வெண்கலகிமிளை, காககிமிளை. பொன் வெள்ளி, செம்பு வெண்கலம், பித்தளை, இரும்பு, எஃகு துத்தம், நாகம், வெள்ளீயம், காரீயம், அரிதாரம் மனோசிலை புங்கர் விகைப்பருப்பு சுக்கு, மிளகு, திப்பிலி, ஏலம் அதிமதுரம், கோஷ்டம், கடுக்காய், தான்றிக்காய், நெல்லிபருப்பு இந்துப்பு துத்தம் சர்க்கு பலகரை, மனிதன் தலைஓடு, கோழி முட்டை ஓடு, சாவல் நெஞ்செலும்பு. ஆமை ஓடு, துருசு, கடல் நுரை. சங்கு, நாழி, வெண்பீங்கான்ஓடு சுண்ணாம்புக்கல், கூழாங் கல் கருடப்பச்சைக்கல் எலிப்பல் பெருச்சாளி எலும்பு கொங் காழங்காய் பொன்னாங்கண்ணி வேர், சிறுகீரை வேர் ஓரிலைத் தாமரை வேர், வெள்ளச்சாரணை வேர், வெள்ளைக் காக்கரட்டான் வேர், நந்தியாவட்டம் வேர், ஆவாரை வேர் குதிரை வாலி வேர், சிறு புள்ளடி வேர், பண்ணை வேர், பெருப்பூளை வேர், செருப்படி வேர், சங்கம் வேர், எலிபரட்டை வேர், சடைக்கஞ்சா வேர், பிரண்டை வேர். புளியாணைக்கிழங்கு, சத்திச்சாரடைக் கிழங்கு இவற்றை சமமாகச் சேர்த்து சூரணிக்கவும் எலுமிச்சம்பழம், பனைமட்டை, நெல்லிக்காய், கையாந்தரை, பொடுதலை. மருளங் கிழங்கு, புளியம்பூ. புளியங்கொழுந்து ஊறவலி முருங்கிலை. தேன்கொடுக்கு நந்தியாவட்டப்பூ, முருங்கைப்பூ, தண்ணீர் விட்டான், புங்கம்வேர்ப்பால், சாரடை இலை, இந்தச்சாறு ஒவ்வொன்றிலும் 7-நாள் அரைத்து செப்புப் பாத்திரத்தில் தடவி எடுத்து கல்வத்திலிட்டு தாய்ப்பால், கிலிஞ்சல் தண்ணீர், வெள்ளாட்டுப்பால், இளநீர், பசுப்பால், சுத்தஜலம், சந்தனநீர், பன்னீர், அதிமதுரக்கஷாயம், செங்கழுநீர்ப்பூச்சாறு தாமரைப் பூச்சாறு. தாமரை வளையச்சாறு இவை ஒவ்வொன்றிலும் 3-நாள் அரைத்து வர்த்தி செய்து அனுபானமறிந்து கண்ணிலிட சகல நேத்திர ரோகங்களுந் தீரும்.

## மஹாமண்டல செய்திகள்.

# தமிழ்நாடு ஆயுர்வேத மஹாமண்டலம்.

## நிர்வாஹ ஸமிதிக் கூட்டம்.

1952-ஆம் மார்ச்சு-மீ 27-உ வியாழக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு திருச்சி ஆயுர்வேதிக் யூனியன் கட்டிடத்தில் வைத்ய வாசஸ்பதி ஸ்ரீ P. S. ராமசர்மா அவர்கள் தலைமையில் மஹா

மண்டலத்தின் விசேஷ அவசர நிர்வாஹ ஸமிதிக் கூட்டம் நடைபெற்றது. பத்து அங்கத்தினர்கள் வந்திருந்தார்கள். கீழ் கண்ட விஷயங்களைப்பற்றிய ஆலோசனைகள் செய்யப்பட்டு தீர்மானிக்கப் பட்டது.

1. நிர்வாஹ ஸமிதி அங்கத்தினர்கள் தேர்தல்—
காலி ஸ்தானங்களைப் பூர்த்தி செய்தல்,

கீழ்க்கண்ட அங்கத்தினர்கள் ஏகமனதாக தேர்ந்தெடுக்கப் பட்டார்கள்.

1 ஸ்ரீ P. S. ராமசர்மா (கரூர் தலைவர், வைத்ய சந்திரிகை உதவி ஆசிரியரும் பிரசுரகர்த்தாவும்) 2. ஆயுர்வேதாசார்ய ஸ்ரீ V. P நடராஜ சாஸ்திரிகள் (திருச்சி) உபதலைவர், 3. ஆயுர் வேத ஸேவாப்ரவீண ஸ்ரீ V. ஸுப்ரமண்ய அய்யர், ஸ்ரீரங்கம் (உபதலைவர்) 4. ஸ்ரீ S. V ராதாகிருஷ்ண சாஸ்திரீ (திருச்சி) கார்யதரிசி 5. ஸ்ரீ T. S. ஈசுவர அய்யர், திருச்சி (உபகாரியதர்சி) 6 ஸ்ரீ P. V. ஹரிஹர அய்யர் கரூர். உபகாரியதர்சி. 7. ஸ்ரீ A. ராகவராவ், (திருச்சி) பொக்கிஷதார், 8 ஸ்ரீ S R. வரத ராஜுலு நாயுடு, ஸ்ரீரங்கம், 9. ஸ்ரீ S. M. ஸுந்தரராஜாசாரியார் (ஸ்ரீரங்கம்) 10. ஸ்ரீ R. V. ராம அய்யர், (கரூர்.) 11. ஸ்ரீ P. விசுவநாத அய்யர் (புதுக்கோட்டை) 12 ஸ்ரீ P. K. ராமய்யா சாஸ்திரீ, (புதுக்கோட்டை.)

சென்னை & செங்கற்பட்டு ஜில்லா.

13. ஸ்ரீ V S வெங்கடஸுப்ரமண்ய சாஸ்திரீ, (மைலாப்பூர்) 14. ஸ்ரீ M C. சிவஸுப்ரமண்ய அய்யர், (திருவல்லிக் கேணி) 15. Dr. K. ராகவன், (மாம்பலம்) 16 ஸ்ரீ T. V. ராதாகிருஷ்ண சாஸ்திரீ, (மைலாப்பூர்)

மதுரை 17. ஸ்ரீ பண்டித ஸ்ரீ S. நாராயண அய்யங்கார் வைத்ய சந்திரிகை ஆசிரியர் 18 ஸ்ரீ T. S. ஸுப்ரமண்ய அய்யர். 19. ஸ்ரீ ராமவாரியார்.

ராமனதபுரம் 20, ஸ்ரீ D ஸ்ரீனிவாஸ அய்யர் (ராமேஸ்வரம்) சேலம் 21 R. K பழனியப்பா, தென்ஆற்காடு 22 P. S ஸ்ரீனிவாஸய்யர், (திண்டிவனம்) வடஆற்காடு 23. ஸ்ரீ A P. வெங்கடேசன் 24, ஸ்ரீ T. G. முனிசாமி நாயுடு (திருப்பத்தூர்) கோயமுத்தூர் 25. ஸ்ரீ P S. அனந்தராமசர்மா (பொள்ளாச்சி) 26. ஸ்ரீ K. R ஸுப்பராவ் (ஈரோடு) தஞ்சை ஜில்லா. 27. ஸ்ரீ M. சங்கர வைத்யர் (தஞ்சை,) 28 M V. லக்ஷ்மண சாஸ்திரீ, (திருவாரூர்.) பாக்கியுள்ள எட்டு ஸ்தானங்களுக்கு

சேலம், திருநெல்வேலி, ராமனாதபுரம், தென் வடஆற்காடு ஜில்லாக்களிலுள்ள வைத்யர்களை நேரில் கண்டு கலந்து மஹாமண்டலத்தில் சிரத்தையுள்ளவர்களாகப் பொறுக்கி அவர்களை அங்கத்தினர்களாக நியமிக்கத்தலைவர் அவர்களுக்கு அதிகாரமளிக்கப்பட்டது.

## 2. வைத்ய சந்திரிகை நிர்வாகம்.

(a) வைத்ய சந்திரிகையின் அபிவிருத்தியை முன்னிட்டு மஹாஸம்மேளன காலத்தில் நன்கொடை அளிக்க வாக்களித்த நண்பர்களுக்கு நன்றி கூறி அதுபோன்று மற்ற வைத்ய நண்பர்களிடமிருந்தும் நன்கொடைகளைப் பெற வேண்டிய ஏற்பாடுகள் செய்யக் காரியதர்சிக்கு அதிகாரமளிக்கின்றது.

(b) வாக்களித்த நண்பர்களிடமிருந்து நன்கொடை வசூலானதும் வைத்ய சந்திரிகையின் பேபர்களின் தரத்தை உயர்த்தியும், சுமார் 40 பக்கங்களுக்குக் குறையாமல் பக்கங்களை அதிகப்படுத்தியும் சுமார் 4 பக்கங்களுக்கு ஒரு விஷயமாகப் பல விஷயங்களில் உள்ள நிபந்தங்களைப் பிரசுரம் செய்தும் சுமார் 4 பக்கம் வரை விளம்பரங்கள் சேர்த்தும் பிரசுரமாக்கத் தீர்மானம் செய்யப்பட்டது.

(c) வைத்ய சந்திரிகையின் விளம்பர விகிதங்களைக் கீழ் கண்டவிதம் தீர்மானித்திருக்கிறது.

| | | | |
|---|---|---|---|
| முழுபக்கம் ஒருதடவை ரூ. | 10 | ஒரு வருஷத்திற்கு | |
| அரைப்பக்கம் ,, | 6 | 12 பத்திரிகைக்கு ரூ. | 100 |
| கால்பக்கம் ,, | 4 | ,, ,, அரைப்பக்ம் | 60 |
| | | ,, ,, கால்பக்கம் | 40 |

(d) விஷயங்கள் :— அரசியல் விஷயங்களைப்பற்றி எழுதுபவர் குறிப்பிட்ட நபரையோ வகுப்பையோ தாக்கி எழுதாமல் கொள்கையிலுள்ள குற்றத்தை மாத்திரம் குறிப்பிட்டும், மஹாமண்டலத்தின் லக்ஷியத்திற்கு விரோதமில்லாமலும் ஆக்க ஆலோசனைகளுடன் சுருக்கமாக எழுதவேண்டும்.

சாஸ்திரிய விஷயங்களைப்பற்றி சுமார் 4-5 பக்கங்களுக்கு மேற்படாமல், ஆரோக்யம், ஸ்வானுபூத சிகித்ஸாக்கிரமம், ஸம்ஸ்கிருத நூல்களின் தமிழ் அனுவாதம் (ஸம்ஸ்கிருத மூலத்துடன்) அரசியல், தமிழ் நூல்களைப்பற்றிய ஆராய்ச்சி, மருந்து யோகங்களைப்பற்றிய விமர்சம் குணபாடம் முதலிய பல பிரிவுகளில் தகுந்த நபர்களைக்கொண்டு சாஸ்திரீயமாயும் சுருக்கமாயும் பொது ஜனங்களுக்கும் வைத்யர்களுக்கும் உபயோகமாகுமாறு எழுதப்படவேண்டும்.

கட்டுரைகள் எழுதவும் வைத்ய சந்திரிகையை நிர்வாஹிப்பதில் உதவிசெய்யவும் அமைக்கப்பட்டுள்ள விசேஷ உபஸமிதிக்கு இக்காரியங்களை அடிக்கடி ஞாபகப்படுத்தி காரியங்களைக் கவனிக்க காரியதரிசிக்கு அதிகாரமளிக்கின்றது.

3. விஷேச அவஸர விஷயம்.

மத்ய சர்க்காரால் நியமிக்கப்பட்டுள்ள இந்திய வைத்யமுறை மத்ய ஆராய்ச்சிக்கழக நிர்வாஹ பொதுசபையினால் (Governing body of the central Institute of research in Indigenous systems of medicing) அனுப்பப்பட்ட கடிதப்படி அக்கடிதத்திற்குத்தகுந்த டைரக்டரை சிபார்சு செய்வதைப்பற்றி ஆலோசிக்கப்பட்டது. பம்பாய் ஸ்ரீ வைத்ய யாதவஜீ திரிகம்ஜீ ஆச்சார்ய அவர்களே தற்சமயம் இதற்குத் தகுதியுள்ளவர் எனவும், தற்காலத்தில் ஆராய்ச்சிக்கு அடிப்படையான விஷயவாரியாக கிரந்த நிர்மாணம் செய்யவேண்டியிருப்பதால் அதில் தகுதியுள்ளவர் அன்னாரைத் தவிர வேறு இல்லை என்றும் தீர்மானித்து கழகத்திற்கு அவரையே நியமிக்கும்படியும் யாதவ ஸ்ரீ அவர்களுக்கு அதை ஏற்றுக்கொள்ளுமாறும் விவரமாக கடிதம் எழுதி மஹாமண்டலத்தின் சார்பில் தெரிவிக்கக் கார்யதர்சிக்கு அதிகாரமளித்திருக்கிறது.

இம் மூன்று காரியங்களையும் நிர்வாஹ ஸமிதி செய்துவிட்டுக் கலைந்தது.

S. V ராதாகிருஷ்ண சாஸ்திரீ,
பொதுக்கார்யதர்சீ.

# வைத்ய சந்திரிகை.

சென்ற 17 வது தமிழ்நாடு ஆயுர்வேத மஹாஸம்மேளனத்தில் வைத்ய சந்திரிகையை ஒரு சிறந்த வைத்திய மாதப் பத்திரிகையாகச் செய்ய விரும்பி வைத்ய சந்திரிகையில் நிர்வாஹத்தில் ஆலோசனைகள் கூறவும், விஷயதானம் செய்யவும், நன்கொடைகள் வஸூலிக்கவும் மற்ற எல்லாவித உதவிகளும் புரிவதற்காகவும், பதினொரு அங்கத்தினர்கள் கொண்ட வைத்ய சந்திரிகை நிர்வாஹத்திற்கான உப ஸமிதி மஹாமண்டலத்தின் நிர்வாஹ ஸமிதியின் சார்பில் நியமிக்கப்பட்டது. அச்சமிதிக்குக் கீழ்க்கண்ட பதினொரு பெயர்களும் அங்கத்தினராவார்.

1 P. S. ராமசர்மா அவர்கள், மஹாமண்டலத் தலைவர், கரூர். 2. ஸ்ரீ S. நாராயண அய்யங்கார் அவர்கள், வைத்ய சந்திரிகை ஆசிரியர், மதுரை. 3. ஸ்ரீ V. B. நடராஜ சாஸ்திரிகள்

அவர்கள், திருச்சி. 4. ஸ்ரீ A. ராகவராவ் அவர்கள், திருச்சி. 5. ஸ்ரீ V. R லக்ஷ்மீகாந்தசர்மா அவர்கள், கும்பகோணம். 6 ஸ்ரீ G. ஸுப்பையா வைத்யர் அவர்கள், தஞ்சை. 7. ஸ்ரீ S வெங்கடராஜ அய்யர் அவர்கள் தஞ்சை. 8. ஸ்ரீ V. S வெங்கடஸுப்பிரமணிய சாஸ்திரிகள் அவர்கள், சென்னை; 9 ஸ்ரீ T. V ராதாகிருஷ்ண சாஸ்திரிகள் அவர்கள், சென்னை; 10 ஸ்ரீ V நாராயணஸ்வாமி அய்யர் அவர்கள் சென்னை; 11. ஸ்ரீ S. V. ராதாகிருஷ்ண சாஸ்திரி அவர்கள், திருச்சி.

கடந்த 27-3-52 அன்று நடந்த மஹாமண்டல வைத்ய சந்திரிகை நிர்வாஹ ஸமிதிக் கூட்டத்தில் வைத்ய சந்திரிகை நிர்வாஹத்தில் கடைப்பிடிக்கவேண்டிய விஷயத்தில் சிற்சில வழிகளை வகுத்துக் கொடுக்கப்பட்டன. அவை நிர்வாஹ ஸமிதிச் செய்தியில் தனியே குறிப்பிடப்பட்டுள்ளன

மஹா மண்டலத்தின் அங்கத்தினர் சந்தாவாலும், நன்கொடையாலும் சில வைத்ய நண்பர்கள் கொடுக்கவும் விளம்பரங்கள் மூலம் வரும் தொகையாலும் இப் பத்திரிகை நடந்து வருகின்றது. இம்மாதம் முதல் பக்கங்களை அதிகப்படுத்தி பத்திரிகையின் அமைப்பிலும் காகிதத்திலும் தரத்தை உயர்த்த மிகவும் பிரயத்தினப்பட்டிருக்கிறோம். ஆனால் பக்கங்களை அதிகப்படுத்துவதில் ஒரு பெரிய நிர்பந்தமும் சிரமமுமிருக்கின்றதை அங்கத்தினர்கள் உணரவேண்டும் வைத்ய சந்திரிகையின் தரத்தை உயர்த்துவது என்பது அதில் வரும் நிபந்தங்களால் தான் நல்ல சாஸ்திரீயமான விஷயத்தை சுருக்கமாக எளிதில் புரியும்படி அழகாக எழுதி அனுப்பப்படும் கட்டுரைகள் தான் வைத்ய சந்திரிகையின் அழகை அதிகரிக்கச் செய்யும் நமது தலைவர் அவர்களும் பத்திரிகையின் பிரதான ஆசிரியர் அவர்களும் இதில் பூரண சிரத்தையுடனும் உற்சாகத்துடனும் சிறந்த விஷயங்களை வெளியிட்டு வருகிறார்கள். ஆனால் பக்கங்களை அதிகப்படுத்தும்பொழுது அதில் பலதரப்பட்ட சிறந்த கட்டுரைகளை அவர்கள் எதிர்பார்த்ததாலேயே மேற்கூறப்பட்ட பதினொரு அங்கத்தினர்கள் கொண்ட உபசமிதி அமைக்கப்பட்டுள்ளது

இப் பதினொரு அங்கத்தினர்களும் பிரதி மாதமும் ஒவ்வொரு கட்டுரை நியதமாக எழுதி அனுப்பும்படி பிரார்த்திக்கப்பட்டுள்ளார்கள் இவர்களின் ஒத்துழைப்பு பூர்ணமாக நியதமாக இருந்தாலல்லாது வைத்ய சந்திரிகையின் பக்கங்களை அதிகப்படுத்துவது ஸாத்யமாகாது என்பதை அவர்கள் உணரக் கோருகிறேன் இப்பணியின் மற்ற பண்டித வைத்யர்களும் உதவியளிக்கக் கோருகிறோம்.

இவ்வங்கத்தினர்களைத் தவிர வேறு யாராவது பிரதி மாத மும் பத்திரிக்கைக்குக் கட்டுரை எழுதி அனுப்ப விரும்பினால் அதை முன்காட்டி எங்களுக்கு அறிவித்தும் தமது கட்டுரைகளை அந்த அந்த மாதத்தின் 15-ம் தேதிக்குள் வைத்ய சந்திரிகை கார்யாலயத்திற்கோ (சக்தி விலாஸ வைத்யசாலா கரூர்) பொதுக் காரியதரிசி கார்யாலயத்திற்கோ (27 சின்னக்கடை தெரு, தெப் பக்குளம், திருச்சி) அனுப்பக்கோருகிறோம். கட்டுரைகளின் தாரதம்யத்தைப் பொறுத்து வைத்ய சந்திரிகையின் மதிப்பும் உயர வேண்டியிருப்பதால் கட்டுரைகள் சிறந்த முறையில் எளி தில் புரியக்கூடிய வகையில் எழுதப்பட்டும் அனுப்பப்பட வேண் டும். இதைப் பிரசுரிக்கும் விஷயத்திலும், வைத்ய சந்திரிகைக்கு தகுந்ததாக இல்லாத பக்ஷத்தில் நிராகரிக்கும் விஷயத்திலும் வைத்ய சந்திரிகை ஆசிரியருக்கும் உப ஆசிரியருக்கும் பூர்ண அதிகாரம் உண்டு.

வைத்ய சந்திரிகையில் வெளிவரும் விஷயங்களைப்பற்றி, ஒவ்வொரு அங்கத்தினரும் யுக்தமான முறையில், தனிப்பட்ட நபரைப்பற்றி தூஷிக்காமல், விமர்சனம் எழுதி அனுப்புவது மிக வும் உபகாரமளிக்கும். அக்கட்டுரை எழுதியவருக்கும் இது ஒரு நல்ல தூண்டுகோலாகும். தமிழில் வெளிவரும் ஆயுர்வேத பத்திரிகை இது ஒன்றே. அதனால் கட்டுரை எழுதுபவர்களுக் கும் இது ஒரு புதிய அப்பியாஸமே அதனால் விமர்சனம் தகுந்த முறையில் இருந்தால் சிறந்த பலனளிக்கும் என்பதில் ஐயமில்லை.

வைத்ய சந்திரிகையில் இதுகாறும் விளம்பரம் அளித்துக் கொண்டிருப்பவர்களுக்கு மஹாமண்டல அங்கத்தினர் யாவரும் நன்றி செலுத்த வேண்டும். இவ் வருஷம் வைத்ய சந்திரிகையின் நிலைமை மிகவும் அபிவிருத்தியடைய விருக்கின்றன இவ் விஷ யத்தில் பல அங்கத்தினர்கள் தாமாகவே நன்கொடை அளிப்ப தாக வாக்களித்து வருகின்றனர் என்பது மிகவும் ஸந்தோஷ மளிக்கும். வைத்ய சந்திரிகையில் 4 பக்கங்கள் வரை விளம்பரத் திற்காக ஒதுக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. அதன் விகிதம் வேறுபக்கத்தில் கொடுக்கப்பட்டிருக்கின்றது. தற்காலம் எல்லா பத்திரிகைகளுமே விளம்பர வருமானத்தால் தான் நடைபெறு கின்றன இவ் விஷயத்திலும் எல்லா அங்கத்தினர்களும் தங்க ளது வைத்யசாலைகளைப் பற்றியும் தங்களது விசேஷத் தயாரிப்பு களைப் பற்றியும் விளம்பரங்கள் தரக்கோருகிறோம்.

மஹாமண்டல அங்கத்தினர்களாகவோ, நிர்வாஹ ஸமிதி அங்கத்தினர்களாகவோ இருப்பவர்கள் தங்களது 1952 வருஷத் திய சந்தாவை உடனே பொதுக் காரியதர்சிக்கு அனுப்பக்

கோருகிறார்கள். மஹாமண்டல நியமப்படி இதை அந்த அந்த வருஷத்தின் ஆரம்பத்திலேயே அதாவது ஜனவரி மாதத்திலேயே அனுப்ப எதிர்பார்க்கப்படுகிறார்கள் ஆனால் இது விஷயத்தில் அதிக நிர்ப்பந்தப் படுத்தாமல் இதுவரை பல தடவைகள் பிரார்த்தித்து சந்தா பெறுவது வழக்கமாயிருக்கின்றது. இவ்விதம் அங்கத்தினராக இருக்கும் எல்லா அங்கத்தினர்களுக்கும் வைத்ய சந்திரிகை இனமாக அனுப்பப்படுகிறதே தவிர அதற்கென தனி சந்தா வஸூலிக்கப்படுவதில்லை.

இம்மாத ஆரம்பத்தில் எல்லோரும் தங்களது சந்தாவை உடன் அனுப்பும்படி பிரார்த்தித்துப் பொதுக் காரியதர்சியால் கடிதம் அனுப்பப்பட்டுள்ளது. அதற்கு பலர் பதில் எழுதியிருப்பதில் முன் பாராவில் கண்ட மஹாமண்டல அங்கத்தினர் சந்தாவைப்பற்றிய விபரம் பலர் அறியவில்லை எனத் தெரியவந்தது அவர் அவர்களுக்கு தனித்தனியே கடிதம் எழுதுவது சாத்யமாக இல்லை. சிலர் 1951-ம் வருஷத்திய சந்தாவையே இன்னமும் அனுப்பவில்லை. அவர்கள் தங்களது 1951-ம் வருஷத்திய சந்தாவையும், இவ் வருஷத்திய சந்தாவையும் உடனே காரியதர்சிக்கு அனுப்பி உதவி புரியுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

வைத்ய சந்திரிகையின் அபிவிருத்தியை முன்னிட்டுச் சில அங்கத்தினர்கள் நன்கொடை அளிக்க முன் வந்ததைச் சென்ற மாதப் பத்திரிகையில் வெளியிட்டிருந்தோம் அதைப்பார்த்து ஸ்ரீ T. M. முனுஸாமி நாயுடு (திருப்பத்தூர்) அவர்கள் தாமும் வருடந்தோறும் ரூ. 25 வீதம் மூன்று வருஷங்களுக்கு நன்கொடை அளிக்க முன்வந்துள்ளார் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்ளுகிறோம்.

---

## தமிழ்நாடு ஆயுர்வேத மஹாமண்டலம்.

### விசேஷ அவசர நிர்வாஹ ஸமிதிக் கூட்டம்.

நமது மஹாமண்டலத்தின் விசேஷ அவஸர நிர்வாஹ ஸமிதிக் கூட்டம் 10—4—52 வெள்ளிக்கிழமை யன்று மாலை 3 மணிக்கு திருச்சி தென்னூர் ஆத்ரேய ஆயுர்வேதசாலா கட்டிடத்தில் ஆயுர்வேதாசார்ய ஸ்ரீ V. B. நடராஜ சாஸ்திரிகள் (உப தலைவர்) அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

## ஆலோசித்த விஷயங்களும் தீர்மானமும்

1. 27—3—52-ம் தேதியன்று நடந்த நிர்வாஹ ஸமிதிக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானப்படி ஸ்ரீமான் யாதவ ஜீ திரிகம்ஜீ (பம்பாய்) அவர்களுக்கு எழுதிய கடிதத்திற்கு அன்னாரிடமிருந்து தமது விருத்தாப்பியம் குடும்ப நிலை முதலிய காரணங்களால் பம்பயைவிட்டு வெளியே செல்ல இயலாததால் தாம் மஹாமண்டலத்தின் கோரிக்கைப்படி மத்ய இந்திய வைத்ய ஆராய்ச்சிக் கழகத்தின் டைரக்டராக இருக்க ஒத்துக்கொள்ள இயலாதிருப்பதைக் குறித்து வருத்தம் தெரிவித்தும், தன்னை மஹாமண்டலம் சிபார்சு செய்வதைப்பற்றி நன்றி கூறவும் வந்த கடிதத்தைப்பற்றி ஆலோசித்துக் கீழ்கண்ட தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

யாதவஜீ அவர்களின் கடிதப்படி அன்னார் ஜாம் நகரில் இருந்துகொண்டு ஆராய்ச்சிக் கழகத்தை மேம்பார்வை செய்ய இயலாதிருப்பதை உத்தேசித்து ஆராய்ச்சிக் கழகத்தின் பிரதான அலுவலான மூலக்கிரந்தங்களின் ஆராய்ச்சியை பம்பாயிலேயே யாதவஜீ அவர்களின் மேல்பார்வையில் நடத்த ஏற்பாடு செய்யவும், மற்ற பிரயோக (Clinical Basic Sciences) ஆராய்ச்சிகளை ஜாம் நகரில் நடத்துமாறும் இவ்வாராய்ச்சிகளை ஜாம் நகரில் நடத்த சென்னை இந்திய வைத்யக் கல்லூரி ஆயுர்வேதப் பேராசிரியர் ஸ்ரீ V நாராயணஸ்வாமி அய்யர் H. P. I. M. அவர்கள் போதனை முறையிலும் சிகித்ஸையிலும் ஆராய்ச்சியிலும், சிறந்த உழைப்பால் தகுதி அடைந்திருப்பதால் அன்னாரையே டைரெக்டராக நியமிக்கவும் மத்திய சர்க்காரையும் மத்திய ஆராய்ச்சிக் கழக நிர்வாஹக் குழுத் தலைவரையும் இந் நிர்வாஹ ஸமிதி வேண்டிக்கொள்ளுகின்றது.

ஸ்ரீ V. நாராயணஸ்வாமி அய்யர் அவர்களின் சேவை அவ்வாராச்சிக் கழகத்திற்கு இன்றியமையாதிருக்குமாதலால் அவரை சென்னை சர்க்கார் சர்வீஸிலிருந்தும் விடுவித்து மத்திய ஆராய்ச்சிக் கழகத்தில் நியமிப்பது மிகவும் அவசியமென்பதையும் வற்புறுத்துகிறது.

இத் தீர்மானங்களை சம்பந்தப்பட்டவர்களுக்கு விவரமாகத் தெரிவிக்க ஸ்ரீ V. B. நடராஜ சாஸ்திரிகளுக்கும் காரியதர்சிக்கும் அதிகாரமளிக்கப்பட்டது

S. V. ராதாகிருஷ்ண சாஸ்திரீ,
பொதுக் காரியதர்சீ.

## சென்னை வெங்கடரமண ஆயுர்வேத கலாசாலை,

### வைத்தியசாலை ஸ்தாபகர்,

## ஸ்ரீ வி கிருஷ்ணசாமி அய்யர் ஞாபகார்த்த தின விழா.

வெங்கடரமண ஆயுர்வேதிக் காலேஜ் வைத்திய சாலை ஸ்தாபகர் தினம் April (20உ) நடைபெற்றது. விழாவிற்கு நீதிபதி பி கோவிந்தமேனன் தலைமை வகித்தார். விருந்தினரை வரவேற்ற ஸ்ரீ வி வி ஸ்ரீநிவாஸ அய்யங்கார் ஆயுர்வேத வைத்திய மறுமலர்ச்சி, போதனை ஆகியவற்றிற்கு இந்த ஸ்தாபனங்களைத் தோற்றுவித்ததன் மூலம் காலஞ்சென்ற ஸ்ரீ வி கிருஷ்ணசாமி அய்யர் மகத்தான சேவை புரிந்திருப்பதாகக் கூறினார்.

செய்திகளை ஸ்ரீ வெங்கடசுப்ரமண்ய சாஸ்திரி படித்தார். ஆண்டறிக்கையை சமர்ப்பித்த ஸ்ரீ கே. பாலசுப்ரமண்ய அய்யர், இங்கு தர்ம வைத்தியம் நடைபெறுவதால் சர்க்கார் சென்ற வருஷம் நிறுத்திய மான்யத்தை மீண்டும் தரவேண்டுமெனக் கோரினார் ஸர்வகலாசாலையுடன் இந்த வைத்ய காலேஜை இணைப்பதற்கு வசதிகள் பெறுகவேண்டுமென்றும், அதற்குப் பொதுமக்களின் உதவி தேவையென்றும் அவர் கேட்டுக்கொண்டார்.

ஸ்ரீ கோவிந்த மேனனுக்கு வைத்தியரத்ன வாரியார் வரவேற்புரையைப் படித்துக்கொடுத்தார்.

உ

## ஸ்தாபக தின உரை.

### ஸ்ரீ குருப்யோ நம:

பெரியோர்களே!

இன்று இக் கலாசாலையின் ஸ்தாபகர் ஸ்ரீ வி. கிருஷ்ணசாமி அய்யர் அவர்களின் ஞாபகார்த்த சொற்பொழிவை நடத்துவதற்கு என்னை நியமித்தது எனது பாக்கியத்தின் மேன்மையாலேயே இவ்வுலகில் தோன்றினால் உயர்ந்த ஸேவைகள் செய்வதே மனிதனின் கடமை ஆனால் அதை உணருவதுடன் த்யாகத்திற்கே தங்களை அர்ப்பணம் செய்யும் மஹாபுருஷர்கள் தற்பொழுது மிகவும் அபூர்வமாய் விட்டார்கள். கம்பன் காலத்தில் ஆயிரத்துக்கு ஒருவர் இருந்திருக்கலாம் நமது காலத்தில் அந்தக் கணக்கு மிக தூரம் சென்று விட்டது. ஈகை, இரக்கம் முதலியது, ஹிந்து மக்களின் முக்கிய தர்மமாக இருந்தது. அதற்கு இடம்

குறையக் குறையத்தான் சுயநலமிகளை எதிர்க்கும் சக்திகள் பல இஸங்கள் ரூபமாக இன்று உலகில் தழைக்கிறது. தான்மட்டும் வாழுவதற்காக இவ்வளவு விசித்ரமான உலகங்களும் பஞ்சபூதங்களும் ஆச்சரியகரமான பரிணாமங்களும் ஏற்படவில்லை. எல்லோரும் ஓரளவு சுகப்படுவதற்கே கடவுள் இவைகளையெல்லாம் தோன்றுவித்தார். தனது தேவைக்கு மிஞ்சியதையாவது பிறருக்கு உபகரிப்பதுதான் மனிதனின் நோக்கமாக இருக்கவேண்டும். அதிலும் பகுத்தறிவை உபயோகிப்பது விவேகிகளின் கடமை. தோட்டத்திற்கு தண்ணீர் வார்ப்பதே பலனைத்தரும் முயற்சியாகுமேயல்லாமல் இயற்கையின் போஷணையால் வளரும் காடுகளுக்கு தண்ணீர்விட்டு போஷிப்பது சரியான முயற்சியாகவோ சாத்யமான காரியமாகவோ சொல்லமுடியாது. அதுபோல் மனிதனின் அறிவை வளர்த்து தாபத்ரயங்களைப் போக்கி புருஷார்த்தங்களை அடையும்படி செய்யும் சேவையே உண்மையில் த்யாகத்தின் லக்ஷ்யமாகும். மனிதனின் பேரறிவுபெற்று தேவனுவதும் கல்வியாலேயே தவறான கல்விப் பயிற்சியாலேயே மனிதவர்க்கம் பாழடையவும் காரணமாகிறது.

மேன்மைக்கு காரணமான கல்வியின் தானத்தையே எல்லாவற்றையும் விட உயர்ந்த தானமாக நாம் இதனால் தெளிவாக தெரிந்து கொள்ளவேண்டும். வளம், ஜலம் முதலியது தேவையில்லாமல் வளரும் களைகளைப்போன்ற சில கலைகளை நாம் வளர்க்க வேண்டியதில்லை, அவைகளின் உபயோகத்தால் நமது முக்கியமான லக்ஷ்யம் கெட்டுப்போய் ஆத்யாத்ம வழியில் முன்னேற முடியாமல் கீழ் நோக்கிச் செல்ல நேர்ந்தால் அது மிகவும் விரும்பத்தகாததே. அத்தவறுகளை மாற்றி நல்ல வழி செல்ல உதவுவதற்கு நமது வேதங்கள், சாஸ்திரங்கள் முதலியது ஈசனின் அனுக்ரஹமாக தோன்றியுள்ளது. அதை நமது தேசத்தில் ஸ்தாபிப்பதற்காகவே பல அவதாரங்கள் ஏற்பட்டதாகத் தெரிகிறது. அம்மாதிரி ஈடில்லாத தொண்டிற்காகவே நமது ஸ்தாபகர் நம் நாட்டில் தோன்றினர். ஸ்ரீ பதஞ்சலி அவதரித்து சரீரம், மனது, வாக்கு இவைகளின் தோஷத்தை வைத்யம், யோகம் இலக்கணம் இவைகளால் விலக்கியது போல் ஸ்ரீ V. கிருஷ்ணசுவாமி அய்யர் இரண்டு கலாசாலைகளை நிறுவி அதன் மூலம் சரீரம் மனது ஆத்மா இவைகளின் மேன்மையை உலகம் அடைய பேருதவி அளித்திருப்பதைத்தான் நான் இவ்விடம் எல்லாவற்றையும் விட நிகரில்லாத தர்மமாகக் கருதுகிறேன். அதிலும் நமது தமிழ் நாட்டில் ஆயுர்வேத வைத்யப் படிப்புக்கு வசதியே இல்லாத காலத்தில் ஆயுர்வேதம் அழியும் தருணத்தில் அதற்கு புத்துயிர் கொடுக்க முன் வந்த மஹான் நமது ஸ்ரீ V. கிருஷ்ணசுவாமி அய்யர். இக்கலாசாலை சென்னையில் தோன்றாவிடில் இன்று நாம் தென்னாட்டில் காணும் ஆயுர்வேத பண்டிதர்கள்

ஒருவரும் இருக்க முடியாது என்பது உண்மையான விஷயம். ஆயுர்வேத மருந்துகளின் மேன்மையையும் ஹேது லக்ஷணம் சிகித்ஸை முதலிய ஆயுர்வேதத்தின் பூர்த்தியான சாஸ்திரீயத் தன்மையையும் இக்கலாசாலை இன்று தெளிவுபடுத்துவதற்கு நமது ஸ்தாபகரின் தியாகம்தான் மூல காரணம், இன்றைய நிலைமையில் செய்யப்பட வேண்டிய அபிவிருத்தியைக் குறித்தும் அவர் அன்றே சிந்தித்திருப்பார். ஆனால் பிதாவின் லக்ஷ்யத்தை பூர்த்தி செய்யும் ஸுபுத்ரனை அடைந்த அவர் சிறிதும் கவலைப் பட வேண்டிய அவச்யம் இல்லையன்றோ. ஸ்ரீ தசரதர் ஸ்ரீராம ரிடம் ராஜ்யத்தை கொடுக்க எவ்வளவு சந்தோஷப்பட்டார். அது போலவே தற்பொழுது நமது பாலசுப்ரமண்ய அய்யர் அவர்க ளிடம் தனது தர்மங்களை ரக்ஷிக்கும் (சிந்தா) மணியாகப் பெற்றெடுத்து தனது பொறுப்புக்களை ஒப்பிவித்து சாந்தியடைந் துளார் அல்லும் பகலும் वियन्तुर्नैषिवृत्तय: என்றபடி அவர் சென்ற பாதையில் செல்லும் நமது அய்யாவர்களுக்கு மிகுந்த பொறுப்பு இருப்பதை அவர் சிறிதும் சலிக்காமல் வஹித்து வருகிறார். அவர் விடாமுயற்சியால் கூடிய சீக்கிரம் இக்கலாசாலையின் தேவை களை பூர்த்தி செய்து தான் பார்த்துக் களிப்பதுடன் தனது தந் தையின் உள்ளத்தையும் பூர்த்தி செய்து எங்களைப் போன்றவர் களையும் நல்வழியில் நடத்தி உலகம் சுகப்படச் செய்ய அன்னா ருக்கு பூர்ண ஆயுளும், சம்பத்து, மனமும், சக்தியும் அளிக்க ஸ்ரீ தன்வந்தரி பகவானை பிரார்த்திக்கிறேன்.

## தலைமையுரை.

ஸ்ரீ வி. கிருஷ்ணசாமி அய்யரை "மஹா புருஷர்" எனப் போற்றிய நீதிபதி கோவிந்த மேனன், மலையாளத்தில் இன்னும் ஓலைச்சுவடிகளாகப் பல அபூர்வ வைத்தியக் கிரந்தங்கள் இருப்ப தாகவும், அவை வெளி வருவது அவசியமென்றும் கூறினார்.

ஜப்பானில் மேற்கத்திய வைத்திய முறைகளை தேசிய முறை யுடன் இணைத்து சிறந்த ஒரு புது முறையைப் பின்பற்றி வருவ தாகவும், அதைப்போல இந்தியாவிலும் செய்ய முடியுமென்றும் வேண்டிய ஆராய்ச்சிப் பொறுப்புக்களை ஸர்வகலாசாலைகள் மேற் கொள்ள வேண்டுமென்றும் நல்ல ஸம்ஸ்கிருத ஞானம் இதற்கு அவசியம் என்றும் ஸ்ரீ கோவிந்த மேனன் கூறினார்.

## திருச்சி ஆயுர்வேத ஸபா மாதாந்திரக் கூட்டம்.

திருச்சி ஆயுர்வேத சபையின் மாதாந்திரக் கூட்டம் திருச்சி ஆயுர்வேதிக் யூனியன் திருச்சி, கட்டிடத்தில் ஸ்ரீ A. ராகவராவ் A. L. I. M. அவர்கள் தலைமையில் 19—4—52 சனிக்கிழமை

மாலை 4 மணிக்கு நடைபெற்றது. திருச்சி வைத்ய விசாரத S.V. ராதாகிருஷ்ண சாஸ்திரி அவர்கள், காஸத்தில் ஔஷதிகள் என்ற விஷயத்தைப்பற்றி உபன்யாஸம் செய்தார். காஸத்தில் பற்பல அவஸ்தைகளில் குணமளிக்கும் ஔஷதிகளைப்பற்றிக் குறிப்பிட்டு அவைகள் வியாதியைப்போக்க சரீரத்தில் செய்யும் காரியங்களைப்பற்றி விவரமாய் பேசினார். பிறகு அங்கத்தினர் களுக்குள் சர்ச்சை நடந்தது. தன்வந்தரி பிரார்த்தனையுடன் இனிது முடிவடைந்தது

S. V ராதாகிருஷ்ண சாஸ்திரி,

காரியதர்சி.

## சசாங்க கிரணம்.

### (பால் கோவா)

Dr S. வெங்கட்டராஜன் L. I. M. (Regd.)

"சசாங்க கிரணம்" என்று கூறுமிடத்துப் பொதுவாகச் சந்திர ரச்மி அல்லது நிலவு என்று பொருள் கொள்வார்கள். ஆனால் ஆயுர்வேத சாஸ்திரத்திலோ இது மிக்கத் தித்திப்புள்ளதும், சுவையுடன் கூடிய திரட்டுப்பால் அல்லது பால்கோவா என்ற பணியாரமாகும்.

அஷ்டாங்க ஹ்ருதயத்தில் க்ரீஷ்ம ருது சர்யையில் சசாங்க கிரணம் என்ற இந்த வகைப் பலஹாரத்தைச் சாப்பிட்டு, இரவில் நிலா வொளியிலும், நக்ஷத்திர வெளிச்சத்திலும் வைத்துக் குளிர்ச்சி செய்த எருமைப் பாலுடன் சர்க்கரை சேர்த்துப் பருக வும் என்று கீழ்கண்டபடி கூறப்பட்டிருக்கிறது

शशाङ्क किरणान् भक्ष्यान् रजन्यां भक्षयन् पिबेत् ।
ससितं माहिषं क्षीरं चन्द्रनक्षत्रशीतलं ॥

ஆகவே, இது க்ரீஷ்ம காலத்தில் (ஆனி, ஆடி) ஏற்படும் தேகத்தின் வரட்சியைப் போக்கிக் கபத்தையும் வ்ருத்தி செய்யக் கூடிய குணத்தைப் பெற்றிருக்கிறது மேலும் இந்த ருதுவில் சூரிய வெப்பம் அதிகமாகித் திரவபாகத்தையே உறுஞ்சுந்தன்மை பொருந்தியதாக இருப்பதுடன், தேகத்திலுள்ள கபமும் க்ரமேண குறைந்து வாயு வ்ருத்தியாகிறது. அக்காலங்களில் குறைந்த கபத்தை ஈடு செய்யக்கூடியதும், வாயுவையும் சமனம் செய்யக்கூடியதுமான ஆஹார விஹாரங்களே ஏற்றவை இக் குணங்களுடன் கூடியதாக இப்பணியாரம் இருப்பதனாலல்லவோ இதைச் சாப்பிடச் சொல்கிறார் போலும்!

प्रक्षिप्य शर्करां क्षीरे पक्केऽति घनतां गते ।
निवर्तिता ये भक्ष्यास्ते शशाङ्ककिरणाह्वया :

நல்ல சுயமான பாலில் (எருமைப்பாலும் ஹிதமானது), சர்க்கரை சேர்த்து அடுப்பின் மேலேற்றி நன்றாக வற்ற வைத்து லேகிய பதத்தில் எடுத்து வைத்துக்கொள்ளும் வஸ்து "சசாங்க கிரண" மாகும் என்று கூறப்பட்டிருக்கிறது. இந்த வகைப் பணியாரம் நம் நாட்டில் தொன்று தொட்டு இருந்து வருகிறது. இது மிகவும் புஷ்டிகாமானது ; இதையே இன்னும் கொஞ்சம் முறுக வைத்து வடகங்களாக உருட்டி வைத்துக்கொண்டால் சீக்கிரமாகக் கெட்டுவிடாது என்று எண்ணவும் இடமிருக்கிறது

निवर्तितास्तु गुलिका : शशाङ्क किरणा : स्मृता :

சசாங்க கிரணம் என்ற இப்பலகாரத்தைக் குறித்து அபிதான மஞ்சரியில்,

शशाङ्ककिरणो भक्ष : सोमपाली निगद्यते ।
प्रक्षिप्य शर्करां क्षीरे पक्केऽति घनतां गते ॥
सुशीत : शोषितो भक्ष : सोमपालीति कथ्यते ॥

பாலுடன் சர்க்கரை கூட்டி அடுப்பின் மேலேற்றி அதிலுள்ள திரவபாகம் முழுவதும் வற்றிக் கட்டியான பின்பிதை யிறக்கி ஆற வைத்து உபயோகிக்கவும். இதற்கே "ஸோமபாலீ" என்று மற்றொரு பெயர் என்றும் கூறுகிறார்.

ஹ்ருதய போதிகையில் 'சந்திரகாம்' என்ற முறை அநேகமாக 'சசாங்க கிரணத்தை' யனுசரித்தே யிருக்கிறது. இது நாம் தற்காலத்தில் செய்யும் 'பால் கோவா' விற்கு ஒப்பானது.

वांशी पिष्टसिता खण्डै : स गोधूमप्रियङ्गुभि : ।
क्षीरे पाकघने क्षिप्तै : पिण्डाश्चन्द्राह्वया : ॥

பாலுடன் கல்கண்டைப் போட்டு, அடுப்பின் மேலேற்றி எரித்து அது இறுகும் பதத்தில் மூங்கிலுப்பு, கோதுமை, தினையரிசி இம்மூன்றையுஞ் சேர்த்திடித்த பொடியைத் தூவி லேகியம் போல் செய்து கீழிறக்கவும். இதற்குச் "சந்திரஹாரம்" என்றும் பெயர்.

பசுவின் பால் 4 சேராவல், அதற்குப் பாதி சுத்த ஜலம் விட்டு 1 சேராகச் சுண்டியபின் கல்கண்டுத்தூள் 8 பலம்போட்டுப் பாகாக்கிச் சரக்குகளின் தூள் 2 பலம் போட்டு லேகிய பதமாகக் கிண்டி யிறக்கவும்.

இது மிகவும் உயர்ந்த பலகாரமாகும். இதை வயோதிகர்கள், சிறு குழந்தைகள், இளைத்தவர், பலஹீனர், முதலியவர்கள் சாப்பிடலாம்.

# திரட்டு வாகடம் ௫௦

இந்நூல் தஞ்சை சாஸ்வதி மஹால் நூல்நிலையத்திலிருக்கும் நெ. 54 எட்டுச்சுவடியிலிருந்தும் காபி செய்யப்பட்டது. 50 செய்யுட்களாக எழுதப்பட்ட இந்நூல் சிறந்த சிகித்ஸை முறையைப்பற்றிய சிறந்த சங்கிரஹக் கிரந்தமாகும். இதை இயற்றியவர் கொட்டையூர் பண்டாரம் என்பவர் என்று தெரிகிறது. இதன் தமிழ் கருத்துரை திருச்சி வைத்ய விசாரத ஸ்ரீ S V. ராதாகிருஷ்ண சாஸ்திரியால் கொடுக்கப்பட்டுள்ளது.

வாதங்கா னென்பதாக வருகின்ற பக்கவாதம்
சீதமே நடுக்குவாதம் சிறந்திடு முடக்குவாதம்
சூதமெய் யசந்துவாதம் தோன்றிய முகத்தில்வாதம்
பேதமாம் வாதந்தீரப் பெருத்திடு மருந்து கேளே. 1

[க—ரை] பக்கவாதம் நடுக்குவாதம், முடக்குவாதம், சூதிகா வாதம், சந்திவாதம், முகத்தில் தோன்றும் பக்கவாதம் முதலிய வாதத்தின் எண்பது வகை ரோகங்களில் சிறந்த குணமளிக்கும் மருந்து கூறப்படுகின்றது

மருந்துதான் சித்திரமூலம் வளருமா விலங்கை கொன்றை
திருந்திய முருங்கை சங்கு சிறந்த வெள்ளருகு வேம்பு
பொருந்திய வெருகும் சுக்கும் புகழும் திப்பிலி மரிசம்
கருந்திற லவண மஞ்சும் காய்ந்து மண்டலந்தான்
கொள்ளே. 2

[க—ரை] கொடிவேலி வேர் மேல்பட்டை, மாவிலங்கை பட்டை, சரக்கொன்றை மரப்பட்டை முருங்கைப்பட்டை, சங்கம் வேர், வெள்ளருகு சமூலம், வேப்பம்பட்டை. மெருகன் கிழங்கு, சுக்கு, திப்பிலி, மிளகு சமுத்திர உப்பு, இந்துப்பு, கந்தக வெடியுப்பு, வளையலுப்பு, அட்டுப்பு, இவைகளை வகைக்குச் சமனிடை சேர்த்து இடித்துத் தூள் செய்து 1/8 1/4 தோலா அளவில் ஒரு மண்டலம் சாப்பிட வாத நோய்கள் தீரும்.

கொள்ளவே யெண்ணெயஞ்சும் குலவு தில்லைப்பால் கற்கம்
மெள்ளவே முருங்கை வாகை மிகுத்த மாவிலங்கை
கள்ளளிழ்க் காயமிந்து கடிய வெள்ளுள்ளி வசம்பு [மூலம்
உள்ளமா யெரித்துப்பின்னை யுடம்பில் தொக்கிடம்
செய்வாயே 3

[க—ரை] சிற்றாமணக்கெண்ணெய், நல்லெண்ணெய், புங்கு எண்ணெய் இலுப்பை எண்ணெய், வேப்பெண்ணெய், இவ்வைந்து எண்ணெய்களையும் சம அளவு சேர்த்து அவைகளுக்கு சம அளவு பசும்பால் சேர்த்து எண்ணெய்களுக்கு நாலில் ஒரு பங்கு கீழே குறிப்பிடப்படும் கற்கத் திரவியங்களைப் பாலில் அரைத்து எண்ணெய்யுடன் கலக்கி எரித்தெடுத்துத் தைல பாகத்தில் வடிகட்டி மேல் பூசி வரவும்; கல்க சாமான்கள் ;- முருங்கைப்பட்டை, வாகை வேர், மாவிலங்கம்வேர், பெருங்காயம், இந்துப்பு, வெள்ளுள்ளிப்பூண்டு, வசம்பு இவையாகும்.

செய் முறை : எண்ணெய்களில் ஒவ்வொன்றிலும் எட்டுப் பலமெடுத்துச் சூடாக்கி அதில் கல்கத்திரவ்யங்களை வகைக்கு ஒன்றரைப் பலம் எடுத்துச் சேர்த்து பாலில் அரைத்துக் கலக்கிச் சற்று எரிக்கவும். கல்கத்திலுள்ள திரவம் சுண்ட ஆரம்பித்ததும் எண்ணெய்யை இறக்கி வைத்து ஆறின பின் அதில் பாலையும், எண்ணெய்களுக்கு நான்கு பங்கு சுத்த ஜலத்தையும் சேர்த்து எரித்துத் தைல பாகத்தில் வடி கட்டுவதே தைலத்தில் கல்கத்தின் சாரம் சேரச் சிறந்த வழியாகும்.

இத்தைலத்தில் உடம்பில் துவளையாகப் போட்டுக்கொண்டு வர வாத நோய்கள் எல்லாம் தீரும்.

செய்யதோ ரெண்ணஞ் சாகத் திரண்டிடும் பித்தம் கேளாய்
ஐயுமாஞ் சித்தப்பிரமை யறிவிலா விறுமை சுத்தும்
கையவே நடுக்கல் வாந்தி நலத்திடு சுழற்றல் வாய்நீர்
தையலே இதுகட்கெல்லாம் சாற்றிய மருந்து கேளே 4

[க—ரை] ஐயம் சித்தப்பிரமை அறிவு பேதலித்தல், தலை சுற்றல், நடுக்கல், வாந்தி, உமிழ்நீர் அதிகம் வருதல் போன்ற நாற்பது வகை பித்த நோய்களுக்கும் சிறந்த சிகிச்சை முறை கூறப்படுகின்றது.

சாற்றிய மதுரம் கோட்டம், தளர்திரி கடுகு மூலம்
போற்றிய நெல்லி மாஞ்சில் பூரம் சந்தனம் கிராம்பு
மாற்றிய தாளீசம்தாள் மருவு ஜீரகமும் ஏலம்
பார்த்துச் சர்க்கரையும் கூட்டிப் பரிந்து மண்டலந்தான்
கொள்ளே 5

[க—ரை] அதிமதுரம், வாஸனை கோஷ்டம், சுக்கு, மிளகு, திப்பிலி, கண்டந்திப்பிலி, நெல்லி முள்ளி, ஜடாமாஞ்சில், கர்பூரம், சந்தனம், கிராம்பு, தாளீசப்பத்திரி, மருக்கொழுந்து, ஜீரகம்,

ஏலரிசி இப்பதினாறு சரக்குகளையும் இடித்துத் தூளாக்கிச் சமனெடை சர்க்கரை சேர்த்து காலை மாலை 1/4-1/2 தோலா அளவு ஒரு மண்டலம் சாப்பிட பித்த நோய்கள் தீரும்.

பரிந்து நல்லெண்ணெய் பாலும் பரித்திடு நெல்லிச்சாறும்
தெரிந்திடு முசுமுசுக்கை சிந்திலும் பொன்னாங்கண்ணி
வருந்திய முத்தம் சந்தம் மதூரமோ டேலம் மாஞ்சில்
பொருந்து செண்பகப்பூ லவங்கம் பூண்டெரித்
தலைக்குவாரே 6

[க—ரை] நல்லெண்ணெய், பசுவின் பால், நெல்லிக்காய் சாறு, முசுமுசுக்கைச் சாறு, சீந்தில் கொடிச்சாறு, பொன்னாங் கண்ணிச்சாறு, இவை வகைக்குச் சம அளவு சேர்த்து அதில் கல்கமாக கோரைக்கிழங்கு, சந்தனம், அதிமதூரம், ஏலம், ஜடா மாஞ்சில், செண்பகப்பூ, லவங்கம் இவைகளை எண்ணெய்க்கு நாலில் ஒரு பங்கு சேர்த்து ஜலம் விட்டரைத்துக் குழப்பி எரித்துத் தைலபாக முறைப்படி தயார் செய்து கொள்ளவும். இத்தைலத்தைத் தலைக்கு தேய்த்து ஸ்நானம் செய்து வர பித்த நோய்கள் விலகும்.

வார்பெறு தனத்தாய் ஐயம் வளர்ந்திடு மிருபதாகச்
சீர்பெறு மாந்தையிளை திகாடி விக்கல் சர்திப்
பேர்பெறு சுவாச காசம் பெருத்திடு மிருமல் வாந்தி
தார்பெறு சுரமுண்டாக்கும் தனக்கெல்லாம் மருந்து
கேளே 7

[க—ரை] உடலில் கெட்ட கபம் அதிகரிப்பதால் ஏற்படும் மாந்தம், ஈளை, திகாடி விக்கல், வாந்தி, சுவாசகாசம், இருமல் சுரம் போன்ற கப நோய்கள் இருபதுக்கும் மருந்து கூறப்படுகின்றது

தின்று நல்லிஞ்சிச்சாறு தளர்திரு கடுகோ டேலம்
பனைதுநற் கோட்ட மாஞ்சி வா லுளுவரிசி சிங்கி
கனதுறு நாகம் கண்டங்கத்திரி யரத்தை யிந்து
நினைவுறச் சியீலூத்த நெய்யெரித் துள்ளும்கொள்ளே 8

[க—ரை] நல்ல பசுவின் நெய்யும். அதற்குச் சம அளவு இஞ்சிச்சாறும், நான்கில் ஒரு பங்கு கீழ்கண்ட சரக்குகளாலான கல்கமும் சேர்த்து நெய்பாக முறைப்படி எரித்து எடுத்து உள் ளுக்கு சாப்பிடக் கப நோய்கள் தீரும். சுக்கு, மிளகு, திப்பிலி, ஏலம், கோஷ்டம். ஜடாமாஞ்சில், வாலுளுவை யரிசி, கர்கடக

சிங்கி, சிறுநாகப்பூ, கண்டங்கத்திரி, சிற்றரத்தை, இந்துப்பு இவை கல்கத்திற்கான சரக்குகளாகும். நெய்பாக முறைப்படி. இம்முறையில் நெய்பிற்கு நான்கு பங்கு ஜலம் சேர்த்துக் காய்ச்சுவது உசிதமாகும்.

எரித்த நல்லெண்ணெய் பாலும் இசைந்திலா மிச்சம்வேலி
தரித்திடும் சீந்தில் முத்தம் சந்தனம் தேவதாரம்
உரித்த தண்ணீர்விட் டானுயர் நிலப்பனை நன்னாரி
பரித்தமஞ் சிட்டியோடு பகர்தலை தனக்கு வாரே 9

[க—ரை] நல்லெண்ணெய் பசுவின் பால் இவை வகைக்கு சம அளவு சேர்த்துக் கல்கத் திரவ்யங்களை அரைத்துச்சேர்த்துக் கலக்கித் தைலபாக முறைப்படி எரித்து வடிகட்டி உபயோகிக்கக் கப நோய்கள் தீரும். விளாமுச்சம் வேர், கொடிவேலி, சீந்திற்கொடி, கோரைக்கிழங்கு, சந்தனம், தேவதாரம், தண்ணீர்விட்டான் கிழங்கு, நிலப்பனை; நன்னாரி, மஞ்சிட்டி இவைகள் கல்கத் திரவ்யமாகும். இவை நல்லெண்ணெய்க்கு நான்கில் ஒரு பங்கு சேர்க்க வேண்டும்.

செய்முறைக் குறிப்பு :— வாத ரோகத்திலும், கப ரோகத்திலும் கூறப்பட்டுள்ள தைல யோகத்தில் தைல பாகத்திற்குத் தேவையான திரவம் மிகக் குறைவாகவோ, திரவமே கூறப்படாமலோ இருக்கின்றது. இம்மாதிரியான சந்தர்ப்பங்களில் தைல பாகம் சரியாக ஏற்படுவதற்காக எண்ணெய்க்கு நான்கு பங்கு ஜலத்தைச் சேர்த்துக் கொள்வது சிலரின் ஸம்பிரதாயம். சிலர் கல்கத் திரவ்யங்களையே எண்ணெய்க்குச் சம அளவாக எடுத்துக் கொண்டு பதினாறு பங்கு ஜலத்தில் போட்டு நானகில் ஒரு பங்காகக் கஷாயமாகக் காய்ச்சி அதையே சேர்த்துக் கொள்வதும் உண்டு. மற்றும் சிலர் வேறு திரவத்தையே சேர்க்காமல் கல்கத்தைப் பாலிலோ, சுத்த ஜலத்திலோ அரைத்து, எண்ணெயுடன் கலக்கிய பின் சிறிது எரித்து இறக்கி வெயிலில் ஒருவாரம் அல்லது பத்து நாட்கள் வரை வைத்தெடுத்துப் பின்னர் எரித்துத் தைலம் வடிகட்டிக் கொள்ளுகின்றனர். இம்முறைகளில் சற்று வேற்றுமை காணப்பட்டாலும், குணத்தில் பெரும் பேதம் ஒன்றும் ஏற்படாது.

(தொடரும்)

மதராஸ் ஸ்டேட் இன்டியன் மெடிகல் பிராக்டிஷனர்ஸ் கோவாபரேடிவ் பார்மஸி அண்டு ஸ்டோர்ஸ் லிமிடெட்,
X 185, லேட்டிஸ்பிரிட்ஜ் ரோட், அடையாறு. மதராஸ்.

பிரஸிடெண்ட்: வைத்யரத்ன கேப்டன் G. ஸ்ரீனிவாசமூர்த்தி.
பி. ஏ. பி. எல். எம். பி. ஸி. எம்.

## அறிக்கை,

1. ஆயுர்வேத, சித்த, யூனானி தேசீய மருந்துகள் சாஸ்திர சம்பந்தமாயும் தக்க மேல்பார்வையுடனும் தயார் செய்து தேசீய மருந்துகள் கையாளப்பட்ட டாக்டர்களுக்கு சப்ளை செய்ய மதராஸ் ப்ரொவின்ஷியல் இண்டியன் மெடிகல் பிராக்டிஷனர்ஸ் கோவாபரேடிவ் பார்மஸி ஸ்டோர்ஸ் ஸ்தாபிக்கப்பட்டிருக்கிறது டாக்டர்களுக்கு வேண்டிய சுத்தமான மருந்து சாமான்களும் மூலிகைகளும் சப்ளை செய்யப்படும்.

2. தேசிய இந்திய டாக்டர்களும், இதர விதமான பட்டம் பெற்ற தேசீய வைத்தியர்களுக்கும் மாத்திரம் மேற்கண்ட சொஸைடியில் மெம்பராகச் சேரலாம்.

3. ஒரு பங்கின் விலை 5 ரூபாய், பிரவேசக் கட்டணம் பங்கு 1-க்கு 4 அணா கட்டவேணும் ஒரு மெம்பர் 1000 பங்குவரை எடுத்துக் கொள்ளலாம். ஆனால் பிரவேசக் கட்டணம் எல்லா பங்குகளுக்கும் கட்டவேண்டியது 5 ரூபாய்தான்.

4 மேற்கண்ட சொஸைட்டியின் நடந்த 3 வருஷத்தில் லேவாதேவி கீழே கொடுக்கப்பட்டிருக்கிறது

| | | 1495-46 | 1946-47 | 1947.48 |
|---|---|---|---|---|
| 1 | மெம்பர்கள் (தேசீய டாக்டர்கள்) | 261 | 364 | 442 |
| 2. | பங்குத் தொகை | 12,985 | 14 135 | 16 160 |
| 3. | மருந்து விற்பனை | 68,589 | 1 15, 683 | 1,38 348 |
| 4. | லாபம் | 6 000 | 15 085 | 40,522 |
| 5. | பங்குக்கு வட்டி பைலாவில் ஏற்பட்டபடி) | 5% | 5% | 5% |
| 6 | மருந்து வாங்கியதின் பேரில் லாபம் | 1 ரூபாய்க்கு 1 பை வீதம். | 1 ரூபாய்க்கு 4 பை வீதம். | 1 ரூபாய்க்கு 6 பை வீதம் |

5. தேசீய வைத்தியர்கள் யாவரும் மேல்கண்ட சொஸைடியில் சேர்ந்து தங்களுக்கு வேண்டிய மருந்துகளை வாங்கி சொஸைடியின் லேவாதேவியை அபிவிருத்தி செய்யவேணுமாய்க் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

வை. கொண்டல்ராவ்,
காரியதரிசி.

V. P. A.

# "சக்தி ஸஞ்சீவி"

(REGD.)



டிரேட் மார்க்

வைத்ய வாசஸ்பதி

## பண்டிட் P. S. ராமசர்மா

அவர்களின்

நீண்ட கால பரீக்ஷை அனுபவங்களினால் கண்டுபிடிக்கப்பட்ட
கைகண்ட பலனளிக்கும்.

குழந்தைகளுடைய ஈரல் குலைக் கட்டிகளை எந்நிலையிலும் போக்குவதிலும், வராமல் தடுப்பதிலும் நிகரற்ற ஔஷதம்.

எங்கும் கிடைக்கும்!

தயாரிப்பவர் :—

## ஸ்ரீ சக்தி விலாஸ வைத்யசாலா.

கரூர். (S. Ry.)

Published by Pandit P. S. Rama Sarma for Tamil Nad Ayurveda Maha Mandalam & Printed at the Vadivel Press. Karur.